**20.11.2025**

**MCOP.No.113/2022**

**ம.சா.1 : மாயக்கண்ணன்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து நான் ஒரு நாள் காலதாமதமாக தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அன்றே புகார் கொடுத்துள்ளேன். விபத்து நடந்தது 22.09.2021 என்றால் சரிதான். விபத்திற்கு நான் காரணம் என்பதால் தான் நான் பின்யோசனை செய்து ஒரு நாள் கால தாமதமாக 23.09.2021ல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் எனது இரு சக்கர வாகனத்தின் முன் புறத்தில் தான் சேதம் ஏற்பட்டது என்று ம.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) இந்த விபத்து சமயத்தில் மாருதி ஆல்டோவின் ஓட்டுநர் கவனமாகவும் நிதானமாகவும் ஓட்டி வந்தார் என்றும் நான் சாலையின் போக்குவரத்தை கவனிக்காமல் எவ்வித சைகையும் செய்யாமலும் சைகை விளக்கு போடாமலும் வேகமாக சாலையை கடக்க முற்பட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. டிவி மெக்கானிக் கடையை நடத்தி வந்ததாக விசிடிங் கார்டு இந்த மனுவிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசிடிங் கார்டில் அந்த கடை எங்கு நடத்தப்பட்டு வந்தது என்பதற்கான முகவரியும் அதில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கடை நடத்தி வந்ததற்கான ஜிஎஸ்டி பதிவு சான்றிதழ்களோ தொழில் வரி ரசீதோ ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் மாதம் 50000/- சம்பாதித்தேன் என்று சொல்வதற்கு வருமான வரி ரசீதுகள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நிரந்தர வருமான வரி கணக்கு வைத்துள்ளேன். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

3) நான் மெக்கானிக் கடை எதுவும் நடத்தாததால் தான் நான் இது சம்மந்தமாக எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இம்மனுவில் நான் ஒப்படைத்துள்ள மருத்துவ பில்கள் மற்றும் போக்குவரத்து பில்கள் இந்த மனுவிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 01.10.2023 க்கு பின்னிட்டு தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.20 17:58:17 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**